கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

**MCOP.No.132/2025**

நாள் : 02.07.2026
ம.சா.2 – ரவிக்குமார்

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் இறந்த நபர் ஏழு வருடங்கள் பணிபுரிந்ததாக நிருபணவாக்குமூலத்திலும், பத்து ஆண்டுகள் பணிபுரிந்ததாக சம்பளசான்றிதழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் – பதிவு செய்து ஏழு ஆண்டுகள் ஆகிறது, அவர் என்னிடம் வேலை பார்த்து பத்து ஆண்டுகள் ஆகிறது என்று குறிப்பிட்டுள்ளேன். இறந்தவர் உங்கள் ஊர் என்பதனால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் – சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**

நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் – Diploma Civil Enginner முடித்துள்ளேன். செல்வராஜ் எப்படி இறந்தார் என்று தெரியுமா என்றால் – விபத்தில் இறந்தார் என்று சொன்னார்கள். உங்களிடம் எத்தனை வருடங்கள் வேலை பார்த்தார் என்றால் – பத்து வருடங்களாக வேலை பார்த்தார். கட்டிடம் சம்மந்தமாக உங்களது நிறுவன வேலை இருப்பதால் உங்கள் நிறுவனத்தில் வேலை செய்யும் நபர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் – இல்லை. தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் – இல்லை. கொத்தனாருக்கு மாதத்தில் எவ்வளவு நாள் வேலை இருக்கும் என்றால் – அவர்கள் வருவதை பொறுத்து. நீங்கள் காண்ட்ராக்ட் தொழில் செய்வதற்கு

**உரிமம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் – இல்லை. உங்களது நிறுவனத்தின் வங்கி கணக்கிலிருந்து இந்த வழக்கில் இறந்த செல்வராஜ்ற்கு சம்பள பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதா என்றால் – இல்லை. மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உங்களது நிருபணவாக்குமூலத்திலும், ஆவணம் எதுவும் இல்லாமல் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் – சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.